UDI

# Forbud mot tvangsekteskap (tamil)
# கட்டாயத் திருமணத்திற்கான தடை

கட்டாயத் திருமணங்கள் நடைபெறும் நாடுகளிலிருந்து வரும் அகதி விண்ணப்பதாரர்கள், கட்டாயத் திருமணத்தைத் தடை செய்யும் நோர்வேயிய சட்டதிட்டங்கள்பற்றி தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் தனது விருப்பத்திற்கு எதிராக, வற்புறுத்தல், பயமுறுத்தல் அல்லது மனோரீதியான அல்லது உடல் ரீதியான துன்புறுத்தல் காரணமாக திருமணம் செய்தால், அத்திருமணம் கட்டாயத் திருமணமாகக் கருதப்படும்.

## தமது விருப்பத்துக்கு எதிராக திருமணம் செய்யக் கட்டாயப்படுத்துவதற்கு நோர்வேயில் தடை

ஒருவரைத் தமது விருப்பத்துக்கு எதிராக திருமணம் செய்யக் கட்டாயப்படுத்துவது, நிர்ப்பந்திப்பது நோர்வேயில் தடை செய்யப்பட்டுள்ளது. கட்டாயத் திருமணமானது, கடுமையான அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

திருமணமானது சொந்த விருப்பின் அடிப்படையிலேயே நடைபெறவேண்டும். அதாவது, ஒவ்வொருவரும், தான் திருமணம் செய்வதா?, யாரை, எப்போது திருமணம் செய்வது என்பதைத் தான் தான் தீர்மானிக்கலாம்.

இன்னொருவரைத் திருமணம் செய்யக் கட்டாயப்படுத்துவது அல்லது கட்டாயத் திருமணத்திற்கு துணைபோவது போன்ற செயல்களைச் செய்வோர், ஆறு வருடங்கள்வரையான சிறைத் தண்டனைக்கு உள்ளாக்கப்படலாம். வெளிநாட்டில் கட்டாயத் திருமணம் நடைபெற்றாலும், இது பொருந்தும். சட்டப்படி குற்றுவாளியாக தீர்மானிக்கப்படுபவர்கள், நாட்டைவிட்டு வெளியேற்றப்படலாம்.

Informasjonsskriv / தகவேலடு
UDI 2014-041, www.udiregelverk.no

கட்டாயத் திருமணத்தை நிறைவேற்றும் நோக்கில், திருமணம் செய்யப் போகிறவர்க்கோ அல்லது அரச அதிகாரிகளுக்கோ, தெரிந்து கொண்டே தவறான தகவல்களைக் கொடுப்பது, கட்டாயத் திருமணத்துக்கு துணைபோதல் என்றே அர்த்தமாகும்.

நோர்வே நாட்டில் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் (வயதெட்டாதவர்) சிறார் ஆவர். நீங்கள் திருமணம் செய்வதாயின் 18 வயதை அடைந்திருக்கவேண்டும். 16 வயதிற்கு உட்பட்ட சிறாருடன் பாலியல்ரீதியான தொடர்பை கொள்ளுவது தண்டனைக்குரிய குற்றமாக அமையலாம்.

பலவந்தத்திருமணம் மற்றும் வயதெட்டாத ஒருவருடன் பிறநாட்டில் செய்யப்படும் திருமணம் என்பவற்றை காரணமாகக் கொண்டு குடும்பமீழினைவுக்கான உரிமையை நோர்வேயில் வசிக்கும் ஒருவர் சாதாரணமாகப் பெற்றுக்கொள்ள முடியாது.

## கட்டாயத் திருமணத்துக்கு ள்ளாக்கப்பட்டிருந்தால் உங்களுக்கு உதவிகள் கிடைக்கும்

கட்டாயத் திருமணத்துக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது உள்ளாக்கப்படலாம் என்று பயப்படுவோருக்கான உதவிகளை நோர்வேயிய அரச அதிகாரிகள் வழங்குவார்கள். பாதுகாப்பான உறைவிடம், வழிகாட்டல், முறையீடு செய்வதற்கு மற்றும் திருமணத்தை இரத்துச் செய்வதற்கான வழக்கறிஞர் உதவிகள் போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை அரச அதிகாரிகள் வழங்குவார்கள்.

கட்டாயத் திருமணத் தடைச்சட்டம் சம்பந்தமான அல்லது எங்கே உதவிகளைப் பெறலாம் என்பன பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின், வெளிநாட்டவர் திணைக்களத்தை அல்லது அகதிகள் வரவேற்பகத்தைச் சேர்ந்த பணியாளர்களைத் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் மருத்துவர் அல்லது மருத்துவ ஆலோசகர் ஆகியோருடனும் தொடர்பு கொள்ளலாம்.

UDI

## தகவல்களைப் புரிந்து கொண்டீர்களா?

**Informasjonsskriv / தகவேலடு**

**[UDI 2014-041](), [www.udiregelverk.no]()**

## தகவல்களைப் புரிந்து கொண்டீர்களா?

☐ Jeg har forstått informasjonen /
நான் தகவல்களைப் புரிந்து கொண்டேன்

| |
|---|
| Søkerens navn og DUF-nummer / விண்ணப்பதாரரின் பெயர், DUF இலக்கம் |
| Sted og dato / இடம், திகதி |
| Underskriften til søkeren[1] / விண்ணப்பதாரரின் கையொப்பம் [2] |

☐ Jeg bekrefter å ha gitt informasjon / தகவல்களை வழங்கியுள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்

| |
|---|
| Underskriften til medarbeideren/saksbehandleren / பணியாளரின் கையொப்பம் |
| Eventuelle merknader / மேலதிக குறிப்புகள் |

1 Asylsøkere under 18 år skal ikke undertegne informasjonsskrivet, men bekrefte muntlig om informasjonen er forstått.

2 18 வயதுக்குக் குறைந்த அகதிவிண்ணப்பதாரர் இத்தகவலேட்டில் கையொப்பமிடத் தேவையில்லை. ஆனால், தகவல்களைப் புரிந்து கொண்டேன் என்பதை வாய்மொழி மூலம் உறுதிப்படுத்தலாம்.

# Forbud mot tvangsekteskap (tamil)

Alle asylsøkere som kommer fra land der det forekommer tvangsekteskap, skal motta informasjon om det norske lovforbudet mot tvangsekteskap.

Hvis noen blir gift mot sin vilje, etter å ha blitt utsatt for press, trusler eller annen psykisk eller fysisk vold, kalles det et tvangsekteskap.

## I Norge er det forbudt å tvinge noen til å gifte seg

Det er forbudt å tvinge eller presse noen til å gifte seg. Tvangsekteskap er en alvorlig krenkelse av grunnleggende menneskerettigheter.

Et ekteskap skal inngås av egen fri vilje. Det betyr at enhver skal bestemme selv *om* hun eller han vil gifte seg, med *hvem* og *når*.

Den som tvinger noen til å gifte seg eller medvirker til tvangsekteskap, risikerer fengselsstraff i inntil seks år. Dette gjelder selv om ekteskapet inngås i utlandet. Personer som blir dømt for dette kan også bli utvist fra Norge.

Som medvirkning til tvangsekteskap regnes blant annet bevisst å gi uriktige opplysninger til myndighetene eller til personen som skal inngå ekteskap, hvis hensikten er å gjennomføre et tvangsekteskap.

I Norge er alle under 18 år barn (mindreårig), og du må være 18 år for å gifte deg. Det kan være straffbart å ha seksuell omgang med barn som er under 16 år.

Tvangsekteskap og ekteskap som er inngått i utlandet med en som er mindreårig, vil normalt ikke gi rett til å få familiegjenforening som ektefelle i Norge.

## Du kan få hjelp om du er utsatt for tvangsekteskap

Norske myndigheter skal hjelpe personer som har blitt eller frykter å bli utsatt for tvangsekteskap. Myndighetene kan gi trygg bolig, veiledning og hjelp fra advokat til å anmelde forholdet og få ekteskapet kjent ugyldig.

Hvis du trenger mer informasjon om lovforbudet eller hvor du kan få hjelp, kan du snakke med ansatte i UDI eller på asylmottaket. Du kan også snakke med en lege eller en helsesøster.

**Har du forstått informasjonen?**